உ

கணபதி துணை.

திருக்கைலாயபரம்பரைத்

தருமபுர வாதீனத்தைச்சேர்ந்த

காசி மடாலயபதி

ஸ்ரீமத் குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

# திருவாரூர் நான்மணிமாலை

## மூலமும்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்செய்த

குறிப்புரையும்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—கரு.

தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிக்கப்பெற்றது.

1922.

உ

கணபதிதுணை.

# திருவாரூர் நான்மணிமாலை மூலமும்

## குறிப்புரையும்.

### காப்பு.

நாடுங் கமலேசர் நான்மணிமாலைக்குநிகட்
பாடுங் கவிதைநலம் பாலிக்கும்—வீடொன்ற
முப்போ தகத்தின் முயல்வோர்க்கு முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

இலக்குமிபூசித்த காரணத்தாற் கமலையென்பது திருவாரூர்க்குப் பெய ரென்பர். அகம்-மனம். முயல்வோர்-முயற்சிசெய்வார். எண்ணித்தியானிப்பவ ரென்பதுகருத்து. கைப்போதகம்-துதிக்கையையுடையவிநாயகக்கடவுள்.

### நூல்.

நேரிசை வெண்பா.

நீரூர்ந்த முந்நீர் நிலவலய நீள்கொடிஞ்சித்
தேரூர்ந்த செல்வத் தியாகனே—யாரூர
வீதிவிடங் காவடங்கா வேலைவிடம் போலுமதிப்
பாதிவிடங் காகடைக்கண் பார்த்து.

முந்நீர்-கடல். நிலவலயம்-பூமண்டலம். கொடிஞ்சி-தாமரைப்பூவடிவ மாகச்செய்து தேர்த்தட்டின்முன்னே நடுவது. விடங்கர்-டங்கத்தினாற்செய்யப் படாதவர், டங்கம்-உளி. ஏனையசுயம்புமூர்த்திகள்போலாது வீதியின்கண்ணு மெழுந்தருளுதலால் வீதிவிடங்கர் எனப் பெயர்கூறுவர். வேலை-கடல். மதி பாதி விடம் கா-பாதிமதியாகிய விடத்தையும் (துன்பஞ்செய்யாது) காப்பாய். தனக்குத்துன்பஞ்செய்தலால் இம்மதியும் வேலையிலெழுந்தவோர் வெண்ணிற நஞ்சாமெனக் கருதிக் கண்பார்த்துக் காவென்றானென்க. பூமண்டலத்தை [illegible] இரிபாசங்காரகாலத்தென் றறிக.

### கட்டளைக்கலித்துறை.

பார்பெற்ற வல்லிக்கும் பாகீ ரதிக்குமெய்ப் பாதியுமத்
தார்பெற்ற வேணியுந் தந்தார் தியாகர் தடம்புயத்தின்
சீர்பெற்றி லேமென்று நாணால் வணங்கிச் சிலையெனவும்
பேர்பெற்ற தாற்பொன் மலைகுனித் தாரெம் பிரானென்பரே.

நாண்-வெட்கம், வில்லினாண். வணங்கி-தலைவணங்கி, வளைந்து. சிலை-மலை, வில். பொன்மலை-மேருமலை. குனித்தார்-வளைத்தார். (2)

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்பாக நகுதலையோ டெழிலாக வணிந்தகம லேச மற்றுன்
றன்பாக மிடப்பாகத் தலைவிகரு விழிதோய்ந்துந் தலைவி பாகத்
தன்பாக நின்றிருநோக் கதுதோய்ந்துந் திருநிறம்வே றாகை யாலப்
பொன்பாக மிதுவெனவு நின்பாக மிதுவெனவும் புகலொ ணாதே.

நகுதலை-(தக்கன்யாகத்திற்சிரித்துக்கொண்டுவந்த) தலைகள். ஓடு-பிரம கபாலம், அன்றி ஆமையோடுமாம். உன்றன் பாகம் என்றது கமலேசரது வலப் பாகத்தை. தலைவிபாகம்-இடப்பாகம். நிறம் வேறாதலாவது கருவிழிதோய்ந்து வலப்பாகங் கருநிறமாகவும், திருச்செவ்விழிதோய்ந்து இடப்பாகஞ்செந்நிறமாக வும் வேறாத லென்க. (3)

### நேரிசையாசிரியப்பா.

ஒண்கதிர் பரப்புஞ் செங்கதிர்க் கடவுள்
வெயில்கண் டறியா வீங்கிருட் பிழம்பிற்
புயல்கண் படுக்கும் பூந்தண் பொதும்பிற்
காவலர்ப் பயந்து பாதவத் தொதுங்கிய
விருவே றுருவிற் கருவிரல் மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறக் காண்டது முளையெயி றிலங்க
மடித்தலத் திருத்தி வகிர்ந்தவள் ளுகிராற்
றொடுத்தபொற் சுளைபல வெடுத்துவாய் மடுப்பது
மானுட மடங்க றூணிடைத் தோன்றி
யாடகப் பெயரி னவுணன்மார் பிடந்து
நீடுபைங் குடரி னிணங்கவர்ந் துண்டென
விறும்பூது பயக்கு நறும்பணை மருதத்
தந்த ணாரூ ரெந்தையெம் பெரும

சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
கங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடம்வலம் பொலிந்த விறைவியு நீயு
நடுவண் வைகு நாகிளங் குழவியை
யொருவிரி னொருவி ருள்ளநெக் குருக
விருவிருந் தனித்தனி யேந்தினிர் தழீஇ
முச்சுடர் குளிர்ப்ப முறைமுறை நோக்கி
யுச்சி மோந்துமப் பச்சிளங் குழவி
நாறுசெங் குமுதத் தேறலோ டொழுகு
மெழுதாக் கிளவியி னேழிசை பழுத்த
விழுமென் குரல மழலைத் தீஞ்சொற்
சுவையமு துண்ணுஞ் செவிகளுக் கையவென்
பொருளில் புன்மொழி போக்கி
யருள்பெற வமைந்ததோ ரற்புத முடைத்தே.

பொதும்பு—சோலை. காவலர்—காப்பவர். பாதவம்—மரம். இருவேறு உரு—இரண்டுவிதமான வடிவம். மேலே மானிட அவயவமும், கீழே மிருகத்தின் அவயவமுங் கொண்டிருத்தலால் இருவேறுருவென்றார். வருக்கையென்றது பலாக்கனியை. இருத்தி—அவ்வருக்கைக்கனியைவைத்து. மடுப்பது—உண்பது. மானிடமடங்கல்—நரசிங்கம். ஆடகப் பெயரினவுணன் — இரணியனென்னும் பெயரையுடைய அசுரன். நிணம்—கொழுப்பு. உண்டென—உண்டாற்போல. இறும்பூது—ஆச்சரியம். பழன மருதம்—வயலையுடையமருதநிலம். நடுவண்—இருவருக்குமத்தியில். நாகு இளம் குழவியை—மிக்க இளமைப்பருவமுள்ள பிள்ளையாகியகுமாரக்கடவுளை. ஒருவிரின் ஒருவிர்—ஒருவரைப்போலொருவர். முச்சுடர் குளிர்ப்ப — மூன்றுகண்களாகிய சோமசூரியாக்கினிகள்நோக்கி மகிழ்ச்சியாகிய குளிர்ச்சியடைய. குமுதத் தேறல்—வாயாகியகுமுதத்திற்சொல்லாகிய தேன். எழுதாக்கிளவி—வேதம். ஏழிசை—சத்தசுரம். இழுமென்குரல — மெல்லென்ற ஓசையையுடைய. மழலை தீம் சொல்—இளஞ்சொல்லாகிய தித்திப்பாகிய மொழி. போக்கி—உட்செலுத்தி. அற்புதம்—அதிசயம். (4)

## நேரிசைவெண்பா.

தேங்குபுக ழாரூர்த் தியாகர்க்கெண் டிக்குமொளி
வீங்கு பகற்போது வெண்படமாந்—தாங்கிருள்சூழ்
கங்குற் பொழுது கரும்படமாஞ் செம்படமாம்
பொங்குற்ற புன்மாலைப் போது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

தியாகராசர்க்கு உடை எண்டிக்குமாதலாற் பகற்போது வெண்ணிறந் தோய்ந்து வெண்படமாம், கங்குற்போது கருநிறந்தோய்ந்து கரும்படமாம், மாலைப்போது செந்நிறந்தோய்ந்து செம்படமாமென்க; இஃதோரற்புதமாமென்பது கருத்து. (5)

## கட்டளைக்கலித்துறை.

போதொன் றியதண் பொழிற்கம லேசர்பொன் மார்பிலெந்தாய்
சூதொன்று கொங்கைச் சுவடென்ப ராற்றொல் களிற்றுரிவை
மீதொன் றுவகண்டு வெங்கோப மாமுகன் வெண்மருப்பா
லீதொன் றடிகளி றென்றெதிர் பாய்ந்த விணைச்சுவடே.

எந்தாய் என்றது உமாதேவியை. களிற்றுரிவை—யானைத்தோல். மீதொன்றுவகண்டு—(திருமேனியின்) மேற்பொருந்துவதுநோக்கி. ஒன்றுவது என்பதில் இறுதிவிகாரமாயிற்று. வெம் கோபம் மா—வெவ்வியகோபத்தையுடைய யானை. மாமுகன்—என்றது விநாயகரை. மருப்பாற்பாய்ந்தஎனக்கூட்டுக. இணைச் சுவட்டையென ஐயுருபுவிரித்துரைக்க. (6)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இணங்குகம லாலயமா லிதயத்திற் பொலிந்ததியா கேச ரம்பொற்
கணங்குழைமண் மகளிதய கமலத்தும் பொலிதலினக் கமல மான
மணங்கமழ்பங் கயத்தடஞ்சூழ் கமலைகம லாலயப்பேர் வாய்ந்ததான்மற்
றணங்கனையா ரிதயமுந்தம் மருட்கொழுந ரிதயமுமொன் றாகுந் தானே.

கமலாலயம் மால் இதயம்—இலக்குமியொடுங்கும் மாலினுடையமனம். மண் மகள் இதயகமலத்தும்—பூமிதேவியினிதயகமலமாகிய திருவாரூரிலும். பெரிய புராணந்திருவாரூர்ச்சிறப்பில், "மேதினிக்காதன்மங்கையிதயகமலமா---மாதோர் பாகனாரூர்மலர்ந்ததால்." எனப்பூமிதேவியினிதயகமலமாகத் திருவாரூரைக் கூறியிருத்தல்காண்க. கமலை—திருவாரூரானது. கமலாலயப்பேர்வாய்ந்தது— கமலாலயம் என்னும் பெயர்பெற்றது. மாலிதயகமத்திற் றியானித்து வைத் திருத்தல்போல அம்மாலின் மனைவியாகிய மண்மகளும் இதயகமலத்திலே தியாக ராசரைத் தியானித்துவைத்திருத்தலாற், கடையடியில் மனைவியரிதயமுநாயக ரிதயமுமொன்றாகுமெனக் கூறினாரென்க. மால் இதயகமலத்திலே தியானித் தலைச் சிதாகாசவுபாசனையென்றுந், தகரவித்தையென்றுங் கூறுவர். காஞ்சிப் புராணந்திருநகரப்படலம் சகசு-ஆவதுகவியிற் காண்க. (7)

### நேரிசையாசிரியப்பா.

தானமால் களிறு மாநிதிக் குவையு
மேனைய பிறவு மீகுந ரீக
நலம்பா டின்றி நாண்டுறந் தொரீஇ
யிலம்பா டின்றி யேற்குந ரேற்க
புரவலர் புரத்தலு மிரவல ரிரத்தலு
மிருவே றியற்கையு மிவ்வுல குடைத்தே

அதா அன்று,

ஒருகா லத்தி லுருவமற் றொன்றே
யிடப்பான் முப்பத் திரண்டறம் வளர்ப்ப
வலப்பா லிரத்தன் மாநிலத் தின்றே
விண்டோட நிவந்த வியன்றுகிற் கொடிகண்
மண்டலம் போழ்ந்து மதியக டுடைப்ப
வாணிலா வமுதம் வழங்கியக் கொடிகள்
வேனிலிற் பயின்ற வெப்பம தாற்றுபு
கொடியா ரெத்துணைக் கொடுமை செய்யினு
மதியார் செய்திடு முதவியை யுணர்த்தும்
பன்மணி மாடப் பொன்மதிற் கமலைக்
கடிநகர் வைப்பினிற் கண்டேம்
வடிவ மற்றிது வாழிய பெரிதே.

நலம்பாடின்றி–நன்மையுண்டாதலில்லாது. இலம்பாடின்றி–தரித்திரமில்லாது. உருவம்–வடிவம். இடப்பால் உமாதேவியின் கூறாகவும், வலப்பால் சிவபிரான் கூறாகவும் இருத்தலால் அறம் வளர்த்தலையும் இரத்தலையுங் குறித்துரைத்தாரென்க. நிவந்த–உயர்ந்த. அகடு–நடு, வயிறு. ஆற்றுபு–ஆற்றி. கொடியார் என்றதைக் கொடியவர்க்குந் துகிற்கொடிக்கும், மதியார் என்றதை அறிவுடையவர்க்கும் மதிக்குஞ் சிலேடையாகக்கூறியமொழியென்க. ஒருகாலத்தில் ஒருவடிவிலே யொருபாகம் முப்பத்திரண்டறம்வளர்ப்பவும், ஒருபாகம் இரத்தலுங் கமலையிற் கண்டேமெனக் கூட்டியுரைக்க. (8)

### நேரிசைவெண்பா.

பெருமான் றாிழ்க்கமலைப் பெம்மான்கைம் மானுங்
கருமா னுரியதளுங் கச்சு—மொருமானுஞ்
சங்கத் தடங்காதுந் தார்மார்புங் கண்டக்கா
லங்கத் தடங்கா தவா.

பெம்மான்-உயர்ந்தோன். அதள்-தோல். கச்சு-பாம்பாகிய இடைக்கச்சு. ஒருமான் என்றது உமாதேவியை. சங்கம் என்றது சங்கக்குண்டலத்தை. அவா-(யார்க்குமுண்டாகிய) ஆசை. (9)

## கட்டளைக்கலித்துறை.

வாவியம் போருகஞ் சூழ்கம லேசர்புள் வாய்கிழித்த
தூவியம் போருகந் தோறுநின் றோர்துணைத் தாளடைந்த
வாவியம் போருகந் தாயிரங் கூற்றுடன் றாலுமஞ்சே
னாவியம் போருக நன்னெஞ்ச மேயவர் நாமங்களே.

புள்வாய் கிழித்த தூவி அம்போர் என்றது திருமாலாகிய அம்பையுடையவர் என்பது கருத்து. புள்-பறவை. ஈண்டுக்கொக்குப்பறவையென்க. கஞ்சன் கொல்லவிட்ட கொக்காகியபுள்ளின்வாயைக் கிழித்ததிருமாலைத் தூவியை யுடைய அம்பாகவுடையவர். தூவி-அம்பினிறகு. ஆவி-உயிர். உடன்றாலும்-வருத்தினாலும். நெஞ்சமே அஞ்சேல்-மனமேபயப்படாதே. நாமங்கள் நா இயம்பு-திருநாமங்களை நாவாற்சொல்லு. ஓருக-உன்னுள்ளே தியானிப்பாயாக.

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாம வேற்படைக் கடவுளைப் பயந்தரு ளங்கைநேன் கமலேசர்
வாம பாகத்தைக் கொளவலப் பாகநீர் மங்கைகொண் டனள்போலாந்
தாம நீற்றொளி தன்னிறங் காட்டவெண் டலைநிரை நுரைகாட்டக்
காமர் பூங்கொடி மடந்தையர் மதர்விழிக் கயலுலா வரலாலே.

நாமம்-அச்சம். வாமபாகம்-இடப்பாகம். தாமம்-ஒழுங்கு. தன்னிறம்-நீர்மங்கையின் றன்னிறம். நுரை-(அக்கங்கையின்) நுரை. காமர்-அழகு. விழிக் கயலுலாவரலாவது கமலேசரை விரும்பிவிரும்பிப்பார்த்தலெனக் கொள்க. (11)

## நேரிசையாசிரியப்பா.

வருமுலை பரந்து வாங்கிய நுசுப்பிற்
புரிகுழன் மடந்தையர் பொன்னெடு மாடத்
தொள்கதிர் வயிரமுந் தண்கதிர் நீலமுஞ்
சேயொளி பரப்புஞ் செம்மணிக் குழாமும்
பாயிரு டுரந்து மழகதி ரெறிப்பன
சுரநதி முதல வாநதி மூன்றுந்
திருவமீண் மறுகிற் செல்வது கடுப்ப
வொள்ளொளி ததும்பு மொண்டமிழ்க் கமலைத்
தெள்ளமு திறைக்குந் திங்களங் கலமலித்

தீநிறக் கடவுணின் காண்முறை வணங்குதுங்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழி லுளைய
னாற்றமில் யாக்கை யுவர்நீர்க் கேணிப்
புலத்தலை யுயிர்மீ னலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென வமைத்து வைத்திருந்த
முத்தலைத் தூண்டி றாண்டி யத்தலை
வாழ்நாண் மிதப்பு நோக்கித் தாழா
தயிறலைத் தொடங்கி யயிறலைத் திருத்தலிற்
றன்னா முயற்சி தவறுபட் டொழிந்தென
வெள்குறீஇ மற்றவன் விம்மித முறுக
வருட்பெருங் கடலினவ் வாருயிர் மீனங்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமானந்தத் திரையொடு முலாவி
யெய்தரும் பெருமித மெய்த
ஐயநின் கடைக்க ணருளுதி யெனவே.

வருமுலை-வளருமுலை. வாங்கிய நுசுப்பு-வளைந்தஇடை. மழ கதிர் எறிப்பன-இளங்கதிர்பிரகாசிப்பன. சுரநதி முதல வரநதிமூன்றும்-கங்கைமுதலிய மேன்மையுள்ள நதிமூன்றும்; அவை கங்கை யமுனை சோணை. கங்கைக்கு நிறம் வெண்மை, யமுனைக்கு நிறம் கருமை. சோணைக்கு நிறம் செம்மை ஆதலாலுவமானமாக்கிக் கூறினாரென்க. திருவம்-சிறப்பு. அம்--சாரியை. மறுகு-வீதி. கடுப்ப-ஒப்ப. நுளையன்-மீன்பிடிக்கும்பாதனுக்குப்பெயர். ஊற்றம்-வலிமை. ஐ வளி பித்து-சிலேட்டுமம் வாதம் பித்தம். வாழ் நாள் மிதப்பு-ஆயுள்நாளாகிய மிதப்பு. மிதப்பு என்பது தூண்டிற்கயிற்றினிடையே கட்டியிருக்கிற கிடைச்சு; தூண்டின்முள்ளில் மீனகப்படிற் கிடைச்சுநீருள்ளழுந்தும், அகப்படாவிடில் நீர்மேலேமிதக்குமாதலால் அறிகுறியாகக் கட்டுவதென் றறிக. அயிறல்-உண்ணல். ஒழிந்தென-ஒழிந்ததென்று. வெள்குறீஇ-வெட்கமுற்று. மற்றவன்-அக்கூற்றாகிய நுளையன். விம்மிதம்-ஆச்சரியம். பெருமிதம்-களிப்பு. கடவுள் அருளுதியெனவணங்குதும் எனக் கூட்டுக. (12)

## நேரிசைவெண்பா.

என்பணிந்த தென்கமலை யீசனார் பூங்கோயின்
முன்பணிந்த தெய்வ முனிவோர்க—ளன்பெண்ணும்
புண்சுமந்தோ ரந்தி புடைத்தென்னார் புண்ணியனார்
மண்சுமந்தா ரென்றுருகு வார்.

பூங்கோயில்-திருவாரூர்க்கோயிலுக்கொருபெயர். புண் சுமந்தோம் நந்தி புடைத்து என்னூர்-வாயில்காவலிலிருக்குநந்திபெருமான் கைப்பிரம்பாலடிக்கப்பட்டுப் புண்ணைத்தாங்கினோம் என்று கருதாதவராகி. புடைத்தல்-அடித்தல்.

## கட்டளைக்கலித்துறை.

வரந் தருள வரதம்வைத் தமலென் வரதமிடக்
கரந்தந்த தாலிவர் கையதன் றேபலி காதலித்துச்
சிரந்தந்த செங்கைக் கமலேசர் நாமந் தியாகரென்ப
தாரந்தந்த வாள்விழி யாடந்த தாங்கொ லறம்வளர்த்தே.

வரதம்-வரந்தருவதாகக் கையினையமைத்தல். இவர் கையதன்று-(இடப்பாகம் அம்பிகை பாகமாதலால்) அவ்விடக்கரம் இவருடையகையன்று. அது-அவ்விடக்கரமென்க. சிரம்-பிரமகபாலம். ஏ, கொல்-அசை. (14)

## அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வள்ளமுலைக் கலைமடந்தை மகிழ்நர்தலை மாலைசிர மாலை யாகக் [சாத்த
கொள்ளுவது மலர்மடந்தை கொழுநர்தலை கிண்கிணியாக் கோத்துச்
வுள்ளுவது மொழிவதுமற் றொழியாயே லடிமுடிக ளுணர்ந்தே மென்றே
கள்ளமொழி வான்புகிற்றென் கமலேச வவர்க்கவையே கரியு மாமே.

வள்ளம்-கிண்ணம். கிண்கிணி-சதங்கை, காலணியென்க. கொள்ளுவதும், உள்ளுவதும், மொழிவது எனக்கூட்டுக. ஒழிவது-நீக்கத்தகுவது. அவை கரிகளாம்-அவ்விரண்டுஞ்சான்றாம், (15)

## நேரிசையாசிரியப்பா.

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும்
படர்மருப் பெருமை பைங்குவளை குதட்டி
மடிமடை திறந்து வழிந்தபா லருவி
கரைபொரு தலைப்பப் பெருகுபூந் தடத்துப்
வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசிற்
பானீர் பிரித்துண் டேவெள் ளோதிம
னாற்பெருங் கடலு ளுண்பொரு டெரித்து
நாற்பயன் கொள்ளு நாமகட் பொருவு
மென்பான் மருதத் தண்புனற் கமலைத்

தென்பான் மேருவிற் றிகழுங் கோயின்
மூவ ரகண்ட மூர்த்தியென் றேத்துந்
தேவ ரகண்ட தெய்வ நாயக
நின்னடித் தொழும்பி னிலைமையின் றேனுநின்
றன்னடித் தொழும்பர் சார்புபெற் றுய்தலிற்
சிறியவென் விழுமந் தீர்ப்பது கடனென
வறியா யல்லை யறிந்துவைத் திருந்தாங்
கீரவஞ்சத் தீப்பிறப் பலைப்பச்
சோரா நின்றவென் றுயரொழித் தருளிலை
புறக்கணித் திருந்ததை யன்றோ குறித்திடற்
கோள்வாய் முனிவர் சாபநீர்ப் பிறந்த
தீவாய் வல்வினைத் தீப்பயன் கொண்மா
ருடல்சுமந் துழலுமக் கடவுளர்க் கல்லதை
பிறவியின் றுயரினைக் கறிவரி தாகலி
னருளா தொழிந்தனை போலுங்
கருணையிற் பொலிந்த கண்ணுத லோயே.

கருந்தாது கடுத்த பெரும்பணை தாங்கும் படர் மருப்பு எருமை—இரும்பினை யொத்த மிக்க பருமைதாங்கும் விரிந்தகொம்பையுடைய எருமைகள். குதட்டி—மென்று. மடி—முலைமடி. பால் நீர் பிரித்து—பாலையும் நீரையும் பிரித்து. நாற்பயன்—அறம் பொருள் இன்பம் வீடு என்னு நால்வகைப்பயன். நாமகள்—சரசுவதி. மென்பால் மருதம்—மென்பாலாகிய மருதநிலம். மென்பால் என்பது மருதத்திற்கு ஒருபெயர். மூவர்—திரிமூர்த்திகள். அகண்டம் மூர்த்தி—எல்லாமாகிய மூர்த்தி. தேவர் அகண்ட—தேவர்களாற் கண்டிக்கப்படாதவனே. தொழும்பு—வழிபாடு. விழுமம்—துன்பம். புறம் கணித்துஇருந்ததை அன்று—என்னைப்புறம்பாகக்குறித்திருந்ததன்று. ஐ—சாரியை. கோள்வாய்முனிவர் சாபநீர்ப்பிறந்த—குணம்வாய்ந்த முனிவராகிய ததீசி பிருகுமுதலோர் சாபத்தன்மையாற்பிறந்த. கொண்மார்—கொள்வார். உடல்சுமந்து—(பிறந்து) சரீரத்தைத்தாங்கி. கடவுளர் என்றது திருமான்முதலியோரைக்குறித்தது. கடவுளர்க்கல்லது என்றதனால் அவர்கட்கே பிறவியின் வருத்தந்தெரியுமென்றபடியாம். போலும் ஒப்புமை குறியாதுவந்த அசை யென்க. தேவரகண்டர் என்பது தியாகராசருக்கு ஒரு பெயரெனவுங் கூறுவர். (16)

### நேரிசைவெண்பா.

கண்ணனார் பொய்ச்சூள் கடைப்பிடித்தோ தென்புலத்தா
ரண்ணலா ரஞ்சுவரென் றஞ்சியோ—விண்ணோர்
விருந்தாடு மாரூர மென்மலர்த்தா ணீக்கா
திருந்தாடு கின்றவா றென்.

பொய்ச்சூள்—அடிகாண்பேனெனக்கூறிய பொய்ச்சபதம். கடைப்பிடித்தல்-உறுதியாகப்பற்றுதல். அஞ்சியோ—மதித்தோ. விண்ணோர் விருந்தாடும் ஆரூர—தேவர்கள் புதுமையாகக்கூடுந் திருவாரூரனே. என்—யாது. திருவாரூரில் இருந்ததிருக்கோலத்துடன் ருண்டவஞ்செய்வாரென் றறிக. தாளைத் தூக்கியாடிற் கண்ணனார்காண்பரென்றோ, நமனார்முன்போல் இன்னுமுதைத்து வீழ்த்தின் என்செய்வோமென் றஞ்சுவரென்றுமதித்தோ. இருந்தாடுகின்றவாறு யாதுகாரணமென்பது கருத்து. திருக்கோயிலிற் றேவாசிரயமண்டபத்திற் றேவர்களுங் கூடியிருத்தல்கருதி விண்ணோர்விருந்தாடுமாரூரா எனக்கூறினாரெனலுமாம். (17)

### கட்டளைக்கலித்துறை.

என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேயோ டெழுமை யீன்றவன்னை
மன்னுயிர்க் கொக்குங் கமலைப் பிரான்மணி கண்டங்கண்டு
மின்னுயிர்க் கும்புய லென்றுமென் கொன்றைபைந் தாதுயிர்க்கப்
பொன்னுயிர்க் கொண்கன் பொலன்றுகி லாமென்னை பூந்துகிலே.

இளஞ்சேய்—இளமைப்பருவமுடைய முருகக்கடவுள். மன்—நிலைபெற்ற. மணி கண்டம்—காளகண்டம். மின்—மின்னல். உயிர்த்தல் – விடுதல். புயல்—மேகம். தாதுயிர்க்க—(பொன்னிறமாகிய) மகரந்தங்களைவீச. பொன்—இலக்குமி. பொலன்றுகில்—பீதாம்பரம். பூந்துகில்—அழகியதோலாடையென்க. (18)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமாதி னிதயகம லத்து வைகும்
    பொலிவானு மரியணைமேற் புணரி யீன்ற
மாமாது வழிபடவீற் றிருத்த லானு
    மறைமுதலு நடுமுதலு முடிவி னின்ற
தாமாத றெளிவிப்பார் போனு நீலத்
    தாங்கநெடுங் கடன்ஞால மொருங்கு வாய்த்த
கோமாது மனங்குழையக் குழைந்த வாரூர்க்
    கோமகனார் கிண்கிணிக்கா லமைக ணீரே.

பூமாது-பூமிதேவி, சரஸ்வதி. பூமிதேவியின் இதயகமலமாகத் திருவாரூருள்ளதென்பது, ௭-ஆவது கவியிலுங்காண்க. பொலிவானும்-விளக்கத்தானும். அரியணை-சிங்காதனம். புணரி-கடல். மா-இலக்குமி. மறைமுதல்-பிரமன். நடுமுதல்-திருமால். முடிவில்-அம்மறைமுடிவில். தாமாதல் - தாமொருவரே யாகுதலை. தெளிவிப்பார்-உலகிற்குத்தெளியச்செய்வார். வாய்த்த-பெற்ற. (19)

## நேரிசையாசிரியப்பா.

அழலவிர் சோதி முழுவெயி லெறிப்ப
விளநில வெறிக்குங் குளிர்மதிக் குழவியும்
வெஞ்சினம் பொதிந்த நஞ்சுமிழ் பகுவாய்
வெள்ளைமுள் ளெயிற்றுப் பிள்ளைவா ளரவுந்
தெண்டிரை கொழிக்குந் தீம்புனற் கங்கைத்
தண்டுறை மருங்கிற் றனிவிளை யாட
வுடன்வைத் தாற்றிய படர்சடைக் கடவு
ளெறுழ்வலித் தறுகட் டெறுசினக் கேழன்
முளையெயி றிலங்க முருகுகொப் பளித்துத்
தளையவி ழிதழித் தண்டார் மார்ப
திருவிழி யிரண்டினு மிருசுடர் வழங்கலி
னிரவுநன் பகலு மொருபுடை கிடந்தெனக்
கடங்கலுழ் கடாத் தடங்களிற் றுரிவையு
மடங்கலீ ருரியு முடன்கிடந் தலமா
விண்பட நிவந்த திண்புயாசல
நெட்டிலைக் கமுகி னெடுங்கயி றூர்ந்துக்
கட்டுபொன் னூசல் கன்னிய ராடப்
பைங்குலைக் கமுகு பழுக்காய் சிந்த
வெண்கதிர் நித்திலம் வெடித்துகு தோற்றங்
கந்தரத் தழகு கவர்ந்தன விவையென
வந்தி லாக்கவ ரார்த்தன ரலைப்ப
வொண்மிட றடைந்தாங் குதிரஞ் சிந்தக்
கண்முத் துகுத்துக் கலுழ்வது கடுக்குந்
தண்டலை யுடுத்த வொண்டமிழ்க் கமலைப்
பொற்பதி புரக்கு மற்புதக் கூத்தநின்
சேவடிக் கொன்றிது செப்புவன் கேண்மதி

விலங்கினுண் மிக்கது விண்ணவர் தருவென
வொருங்குவைத் தெண்ணுவ தோர்வழக் கன்மையி
னொத்த சாதியி னுயர்புமற் றிழிபும்
வைத்தன ரல்லதை வகுத்தனர் யாரே
யாருயிர்க் கமைத்த வோரெழு பிறப்பினுண்
முற்படு தேவருண் முதல்வனென் றெடுத்துக்
கற்பனை கடந்த கடவுணிற் பழிச்சுதுந்
தொன்மறைக் குலங்கண் முன்னிய நியாதெனப்
பன்முறை தெரிப்பினும் பயன்கொள வரிதாற்
றேவரி னொருவனென் றியாவரு மருளுற
நீயே நின்னிலை நிகழாது மறைத்துக்
கூறிய நாகு டாகலிற்
றேறினர் மறையெனச் செப்பினர் நன்கே.

அழல்அவிர் சோதி முழுவெயில் எறிப்ப—அக்கினிவிளங்குகின்ற சூரியனைப் போலப் பூரணமான வெயில்பிரகாசிக்க. இவ்வடி சடையின்சிறப்புக்கூறிய தென்க. முள் எயிறு—முள்ளினைப்போன்ற பல். துறை—நதி. உடன்வைத்து ஆற்றிய—(மதிக்குழவியும் அரவும்) கூடவைத்துச் சுமந்த. எறுழ்வலி—மிக்கவலி. தறுகண்—அஞ்சாமை. கேழல் முளை எயிறு இலங்க—பன்றியின்முளைபோலுந் தந்தம் விளங்க. எயிறு ஈண்டுக்கொம்பென்க. முருகு—தேன். தளை அவிழ் இதழி—முறுக்கவிழ்ந்த கொன்றைமலர். ஒருபுடை—ஒருபக்கம். கரடம்—மதம் பாய்சுவடு. களிறு உரிவை—யானைத்தோல். மடங்கல்—சிங்கம். அலமர—சுழல. நிவந்த—உயர்ந்த. ஆர்த்து—தொடுத்து. பழுக்காய்-பழுத்தலையுடையகாய், பழ மென்க. நித்திலம் - முத்துக்கள். கந்தரம் - அக்கன்னியர்கழுத்து. இவை - இக் கமுகுகள். அந்தில் - அவ்விடம், அசையெனினுமாம். கண் முத்து என்றது கண்ணீர்த்துளியை. கலுழ்வது - அழுவது. பழத்திற்கு உதிரமும், முத்திற்குக் கண்முத்தும் உவமானமாம். மதி-முன்னிலையசை. ஒருங்குவைத்து - உடன் வைத்து. அல்லதையென்பதில் ஐ சாரியை. எழுபிறப்பு - தேவர், மக்கள், பறவை, விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம், ஆகிய எழுவகைப்பிறப்பு. கற்பனை - பொய். கடவுள் நிற்பழிச்சுதும் - தெய்வத்தன்மையுடைய நின்னைத் துதிப்போம். முன்னியது - கருதியது. தெரிப்பினு - ஆராயினும். பயன்-பொருள். நின்னிலை நிகழாது மறைத்து நீயே கூறியதாகுமாதலிற் பயன்கொள வரிதெனக் கூட்டுக. நிகழாது-விளங்காது. மறை - மறைத்துக்கூறுவதனுல் மறை. கடவுள், மார்ப, புயாசல, கூத்த, கேள் முதல்வனென்றெடுத்துநிற்பழிச் சுதுமென்க் கூட்டுக. (20)

### நேரிசைவெண்பா.

நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென்.

கமலை நாதனே நாதன்—திருவாரூர்க்குநாயகனே உலகிற்குநாயகன். கடாவிற்கு—வினாவிற்கு. விடையே விடையாக மெய்யுணரார் ஐயுற்று—வாகனமாகிய விடையே அவர் கடாவிற்குத்தரமாயிருக்க உண்மையுணராராகிசந்தேகமுற்று. என் - யாதுகாரணம். (21)

### கட்டளைக்கலித்துறை.

இதுவே பொருளென் றெவரெவர் கூறினு மேற்பதெது
வதுவே பொருளென் றறிந்துகொண் டேனப் பொருளெவர்க்கும்
பொதுவேயென் றாலும் பொருந்துமெல் லோர்க்கும் பொதுவினிற்கு
மதுவேய் மலர்ப்பொழி லாரூரி னும்வைகும் வைகலுமே.

ஏற்பது - ஏற்றுக்கொள்வது பொதுவினிற்கும்—பொதுவாகநிற்கும், அம்பலத்து நடித்து நிற்கும். ஆரூரினும் வைகும்—(அங்ஙனம் பொதுவில்நிற்பதன்றித்) திருவாரூரிடத்துந்தங்கும். (22)

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வைய முழுது முழுதுண்ண வல்லாற் களித்து நவநிதியுங்
கையி லொருவற் களித்தெமக்கே கதிவீ டளித்தோர் கன்னிகைக்கு
மெய்யி லொருகூ றளித்தனரால் விமலர் கமலைத் தியாகரென்ப
தையமிவர்க்கே தருமுகம னன்று புகழு மன்றுமே.

உழுதுண்ணவல்லான் - திருமால். உழுதற்கும் உண்ணுதற்கும் வல்லவனை நோக்கி அளித்தாரென்பது கருத்தாயிற்று. காத்தற்பொருட்டு வையமுழுது மளித்தாரென்பதுமாம். நவநிதி - சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம், என்பன பொருட்டொகைநிகண்டி லறிக. ஒருவன் என்றது குபேரனை. கதிவீடு—மோக்கமாகியவீடு. ஓர்கன்னிகைஎன்றது உமாதேவியை. முகமன் - உபசாரம் இவர்க்கே என்பதில் ஏகாரம் பிரிநிலையுந் தேற்றமுமாம். (23)

## நேரிசையாசிரியப்பா.

ஆமையோ டணிந்து தலையோ டேந்திக்
காமரு மடந்தையர் கடைதொறுங் கடைதொறும்
பலிதேர்ந் துண்ணினு முண்ணு மொலிகழற்
பைந்துழாய் முகிலும் பழமறை விரிஞ்சனு
மிந்திரா தியரு மிறைஞ்சினர் நிற்ப
மற்றவர் பதங்கண் மாற்றியும் வழங்கியும்
பற்றலர்ச் செருத்து முற்றவர்த் தாங்கியும்
பரசுநர் பாசப் பணிகுநர் பணிய
வரசுவீற் றிருப்பினு மிருக்கு முறைசெயின்
யோக சாதனம் போகிகட் கின்மையிற்
செஞ்சடை விரித்து வெண்பொடி பூசி
யெருக்கங் கண்ணியுஞ் சூடி விருப்புடை
யிடப்பான் மடந்தை கொடிப்போழ்து தணப்பினு
மடலூர் குறிப்புத் தோன்ற விடலருங்
காமமீ தூர வேமுற் றிரந்தவ
டாமரைச் சீறடி தைவந் தம்ம
புலவியிற் புலந்துங் கலவியிற் களித்தும்
போகமார்ந் திருப்பினு மிருக்கும் யோகிகட்
கெய்தா வொண்பொருள் கைவந்து கிடைப்ப
ஞான முத்திரை சாத்தி மோனமோ
டியோகுசெய் திருப்பினு மிருக்கு மெழு
தானிய மாடத் தாமிய முற்றத்
தைங்கணைக் கிழவ னாசிய னடாத்தக்
கொங்கைமால் களிறுங் கொலைக்கண் மாட்படையுஞ்
சில்கா ழல்குல் வெல்கொடித் தேரும்
பல்வகை யுறுப்பும் படையுறுப் பாகப்
பவக்குறும் பெறியுந் தவக்குறும் பெறிந்து

நுணங்கிய நுசுப்பி னணங்கனார் குழுமிக்
கைவகுத் திருந்து கழங்கெறிந் தாட
மையுண் கண்கண் மறிந்தெழுந் தலமால்
செம்முகத் தாமரைச் சிறையளிக் குலங்க
ளம்மென் காந்தளி னளிக்குல மார்த்தெழக்
கலந்துமன் றழீஇக் காமுற னிகர்க்கும்
பொலஞ்செய் வீதிப் பொன்மதிற் கமலை
யண்ணன் மாநகர்க் கண்ணுதற் கடவுள்
கற்பனை கழன்று நிற்றலி
னிற்பநின் னிலையெனு நியமமோ வின்றே.

காமரு - அழகு. உ - சாரியை. கடை - வாயில். பலி - பிச்சை. பற்றலர்ச் செகுத்தும் - பகைவரைக்கொன்றும். உற்றவர் - அடைந்தவர். யோகசாதனம் - யோகத்திற்குரிய கருவிகள். தணப்பு - நீங்கல். விரித்தலும் பூசுதலுஞ் சூடுதலு மடலூர்வார்க்குரிய சின்னமாதலால் மடலூர்குறிப்புத்தோன்ற என்றார். மடலூர்தல்-கோவைத்துறைகளிலொன்று. எமுற்று - மயக்கமுற்று. தைவந்து - தடவி. அம்ம - அசை. புலவியல் புலந்தும்—ஊடலில் வெறுத்தும். ஞானமுத்திரை—சின்முத்திரை; இதன்விவரத்தைத் திருவானைக்காப்புராணம் பாயிரத்தில் "மும்மலம்வேறு" என்னுமுதற்குறிப்புள்ளகவியிற் காண்க. யோகு-யோகம். அரமிய மாகிய முற்றமென்க. அரமியம் - நிலாமுற்றம். சில்காழ் - சிலவாகிய மணிக்கோவை. குறும்பு—பொல்லாங்கு, நுணங்கியநுசுப்பு—நுண்மையாகிய இடை, மறிந்து - மறிபடியும். அலமால்—(முகத்திலிருக்குங்கண்கள் கையினின்றுமெழுந்த கழங்கைநோக்கிச்) சுழலுதலானது. மன் தழீஇ - மிகுதியாகத்தழுவி. பொலன் - பொன். அண்ணல் - பெருமை. கற்பனை - பொய். நியமம் - நியதி, (24)

## நேரிசைவெண்பா.

இன்னீ ருலகத்துக் கின்னுயிர்யா மென்றுணர்த்து
நன்னீர் வயற்கமலை நாதனார்—பொன்னார்ந்த
சேவடிக்கா ளானார் சிலரன்றே தென்புலத்தார்
கோவடிக்கா ளாகார் குலைந்து.

இன்னீர் - இனியகடல். ஆள் - அடிமை. அன்றே - அப்பொழுதே. ஏகாரம் - தேற்றம். தென்புலத்தார் கோ - இயமன். யமபுரத்தையடையாரென்பது கருத்து. இல் நீர் உலகம் எனப்பிரித்து நிலையில்லாத்தன்மையுடைய உலகமென்றுங் கூறுவர். (25)

## கட்டளைக்கலித்துறை.

குலைவைத்த செவ்விள நீர்குளிர் பூம்பொழிற் கொம்புக்கின்ப
முலைவைத்த தொக்குங் கமலேசர் வேணி முகிழ்நகைவெண்
டலைவைத்த வேனற் புனமொக்கும் கங்கையத் தண்புனத்தி
னிலைவைத்த மாதரை யொக்குங் கவணொக்கு நீள்பிறையே.

பொழிற்கொம்பு-சோலையென்னும்பெண்ணெனக. வேணி—சடை. ஏனற் புனமொக்கும் - தினைப்புனத்தை யொத்திருக்கும் சடையைக்குறிக்கும்போது, முகிழ்நகை வெண்டலை யென்றது நகுசிர மென்க. தினைப்புனத்தைக்குறிக்கும் போது, அரும்புபோன்ற பற்களையுடைய வெண்ணிறமுள்ள பொய்த் தலை யென்க; இப்பொய்த்தலை தினைப்புனத்திற் கண்ணூறுபடாவகை வைத்திருப்ப தென்க. நிலைவைத்த-இடத்திற் (காவலாக) வைத்த. கவண் - தினைக்கதிர்கவா வரும் புள்ளினத்தை யோட்டுதற்கு மாதர் கல்வைத்தெரியுமோர் கருவி. (26)

## எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிறையொழுக வொழுகுபுனற் கங்கை யாற்றின்
பேரணையிற் றொடுத்துவிட்ட பெரும்பாம்பென்னக்
கறையொழுகும் படவரவம் படரும் வேணிக்
கண்ணுதலார் கமலையிற்பைங் கமலை போல்வீர்
நறையொழுகு மலர்ப்பொழில் குத்தகையாத் தந்தீர்
நானிரண்டு மாவடுவு நாடிக் காணே
னிறையொழுகு மிளநீரு நிற்கக் காணே
னீர்செய்த காரியமென் னிகழ்த்து வேனே.

கமலைபோல்வீர் - இலக்குமிபோன்றவராகிய மாதரே. பொழில் குத்தகை யாத் தந்தீர் - சோலையை மதிப்பிட்டுக்கொடுத்தீர். இரண்டு மாவடுவுங் காணேன் இளநீருங் காணேன் என்றதனாற் குத்தகையாகத் தந்ததிற் பயனில்லையென்பது கருத்தாயிற்று. இக்கவி புறங்காட்டல் என்னுந் துறையமைத்துக்கூறிய தென்க. இதற்குப் பொழில் என்றது கூந்தலை. மாவடு என்பது கண்களை. இளநீர் என்றது தனங்களை. பாம்பு-ஈண்டு வெள்ளமடைதற்கிடும் வைக்கோற்புரியென்க. திருவிளையாடற்புராணம் மண்சுமந்தபடலம், ௫-ஆவதுகவியி லறிக. (27)

## நேரிசையாசிரியப்பா.

வேனிலா னுறுப்பின் மென்றசை யிறைச்சி
தீனாக் கறியத் திருக்கண் டிறந்தோய்
நான்மறை முனிவன் கான்முளை நிற்ப
விடற்கரும் பாசத்தொ டடற்பொறை நீங்க

வுயிருண் கூற்றுக்குத் திருவடி வைத்தோய்
கருங்கடல் வண்ணன் வெள்விடை யாகி
யடிக டாங்கிய வுதவிக் காங்கவன்
முழுவெண்பு சுமந்த கழுமுட் படையோய்
தேவா சிரயன் றிருக்கா வணத்து
மேவா நின்ற விண்ணவர் குழாங்க
ளுருத்திர கணங்களொன் றேத்தினர் வணங்கி
யருக்கிய முதல் வகையமர்க் களிப்ப
வித்தலத் துற்றவ ரினித்தலத் துறுகெனக்
கைத்தலத் தேந்திய கனன்மழு வுமழு
மபூவுடைக் கைய ராகி விழுமிதின்
மாந்தர் யாவருங் காந்தியிற் பொலியும்
வாமிரு கமலத் திருநகர்ப் பொலிந்தோ
யெழுதாக் கிளவியின் மொழியெனப் படுதலி
னின்பெருந் தன்மை நீயே நவிற்றுதன்
மன்பெருப் புலமைத் தன்றே யும்பரி
னின்றோ ரன்ன ரின்மையி னின்னிலை
கூறுய் நீயெனிற் றேறுந ரிலராற்
றன்னுடை யாற்றன் முன்னோர் முன்னர்த்
தற்புகழ் கிளவியுந் தருமென் றம்ம
நிற்புகழ்ந் திசைத்தனை நீயே யாக
விருடீர் காட்சிப் பொருடெளிந் துணர்த்தா
தியங்கா மரபி னிதுவிது பொருளென
மயங்கக் கூறுதல் மாண்புடைத் தன்றே
யளவில் காட்சியை யையமின் றுணர்த்தலிற்
றளரா நிலைமைத் தென்ப வெஃறலிற்
றன்னுடை மயக்கந் திசைமேல் வைத்துச்
சென்னெறி பிழைத்தோன் றிசைமயங் கிற்றென
மொழிகுவ தேய்ப்ப முதுக்குறை வின்மையிற்
பழமறை மயங்கிற் றென்று முழுவது
மெய்யா திசைக்கும் போது
மையநின் றன்மை யளப்பரி தெமக்கே.

தசை இறைச்சி - ஒருபொருட்பன்மொழி. கண் என்றது நெற்றிக்கண்ணை. முனிவன் என்றது மிருகண்டுமுனிவனை. கான்முளை - பிள்ளையாகிய மார்க்கண்டமுனி. நிற்ப - அழியாதிருப்ப. பாசம் - பந்தம். பொறை - பாரம். ஆங்கு - அசை. அவன் முழு என்பு சுமந்த - அம்மாலினுடல் கழிந்த முழுவெலும்பாகிய கங்காளத்தை யணியாகத்தாங்கிய. "கழியுடன்முழுவெலும்புகங்காளமென்பர் நூலோர்" என்பது நிகண்டு. இவ் வென்பைக் காலாந்தரத்திலணிந்ததாகத் திருவாசகத்திற் றிருச்சாழலிற் கூறியதுகாண்க. கழுமுள் - சூலம். தேவாசிரயன்றிருகாவணம்—தேவாசிரயனென்னுஞ்சிறப்புடைய மண்டபத்தில்; இதனைப் பெரிய புராணந்திருக்கூட்டப்புழழ்ச்சியில், "தேவாசிரயனெனுந் திருக்காவணம்" எனக் கூறியதறிக. அருக்கியமுதல - அருக்கியமுதலாக உள்ளனவற்றை; அவை பாத்தியம், ஆசமனம், அருக்கியம், நிவேதனம், தூப தீப முதலியனவாம். பாத்தியம் - பாதசுத்தியின்பொருட்டுப்பாதத்திற்கொடுக்கு நீராகவும், ஆசமனம்—உட்சுத்தியின்பொருட்டு முகத்துவாரத்திற்கொடுக்கு நீராகவும், அருக்கியம்—சிரசிற்றெளிக்கு நீராகவுங் கூறுவர். "பாத்தியாசமனமூன்றும்பதமுகமுடியினீந்து" எனத் திருவானைக்காப்புராணத்திற்கூறியது காண்க. தலத்துறூர் - பூமியிற் பிறத்தலைப்பொருந்தார். உறழும் - ஒக்கும். மழு மான் திரிநேத்திரமுதலாயின சிவசாரூபத்திற்குரிய சின்னங்களாம். ஈண்டு மழுவைமட்டுங் கூறினாராயினும் இனம்பற்றி ஏனையவுங் கொள்க. விழுமிதின் மாந்தர் - சிறப்புள்ளதையுடைய மானிடர்; சிறப்புள்ளதாவது சாரூப மென்க. காந்தி - தெய்வச்சோதியென்க. எழுதாக்கிழவி - வேதம். நவிற்றுதல் - சொல்லுதல். மன்பெரும்புலமைத்து - மிகப்பெரிய அறிவின்றன்மையது. நின்னோன்னர் - நின்னைப்போல் ஒரு தன்மையையுடையவர். முன்னுர் - கருதாதவர். அம்ம - அசை. இருள்-மையல். காட்சிப்பொருள் - ஞேயமாகியபிரமப்பொருள். இயங்காமரபின் - விளக்கமில்லாதமுறைமையினால். அளவு இல் காட்சியை - அளவைகளா லளத்தலில்லாத காட்சித்தன்மையை ஐயமின்றுணர்த்தலில் — சந்தேகமின்றியுணர்த்துதலால். தளராநிலைமைத்தென்ப—(அங்ஙனந் துணிந்துணர்த்தாது மயங்கக்கூறுதல்) சோர்வில்லாத நிலைமையுடையதென்பார்கள் அறிவுடையோர். முதுக்குறைவு-எங்கட்குப்பேரறிவு. என்று-என்று. எய்யாது-அறியாது. போலும்-அசை. (28)

### நேரிசைவெண்பா.

அள்ளற் கரூஉஞ்சேற் றகன்பணைசூ ழாரூரர்
வெள்ளப் புனற்சடைமேல் வெண்டிங்கள்—புள்ளுருவாய்
நண்ணிலா தாரை நகைக்கு நகையையன்றே
தண்ணிலா வென்னுஞ் சகம்

அள்ளல் சேறு - ஒருபொருட்பன்மொழி. புள் - ஈண்டு அன்னப்பறவை. வெண்டிங்கள் நகைக்கு நகையெனக்கூட்டுக. (29)

## கட்டளைக்கலித்துறை.

தண்மல ரும்பொழிற் றென்கம லேசர்க்குச் சாத்துகின்ற
வொண்மலர் சொன்மலர்க் கொவ்வாது போலுமற் றோர்புலவன்
பண்மலர் சாத்திப் பணிகொண்ட வாபச்சை மால்சிவந்த
கண்மலர் சாத்தியுங் காண்பரி தான கழன்மலரே.

ஒண்மை - அழகு, நன்மையுமாம். ஓர்புலவன் என்றது சுந்தரமூர்த்திநாயனாரை. கொண்டவாறு என்பதில் இறுதிவிகாரமாயினது. பணிகொண்டவாறாவது பரவையிடந்தூதுசெல்லச்செய்தன்முதலியனவென்க. கண்மலர் சாத்தியது திருவீழிமிழலையிலென்க. காண்பரிதானது அருணையிற் பிரமனுடனிகலிய காலத்திலென்க. போலும்-அசை. (30)

மல்லல்வளங் கனிந்தபுகழ்க் கமலேசர் திருவுருவும் வாமபாகத்
தல்லமர்பைங் குழலுமையா டிருவுருவு மிருவருக்கு மமுதமான
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவு மருவுருவாங் குணங்கண் மூன்று
நல்லுருவா தலினன்றோ விவரகில காரணராய் நவில்கின் றாரே.

மல்லல்வளம்-மிக்கவளம். கனிந்த-முதிர்ந்த. அயில்-கூர்மை. சாத்துவிககுணத்திற்கு வெண்ணிறமும், தாமதகுணத்திற்குக் கருநிறமும், இராசதகுணத்திற்குச் செந்நிறமுமுண்மையால். மூவர்நிறமுமுறையேகொள்க. அகிலகாரணர்-முக்குணங்களின் அமிசமாகியவுலகிற்குக் காரணமாயிருக்கின்றவரென்க.()

## நேரிசையாசிரியப்பா.

நவமணி குயின்ற நாஞ்சில்சூழ் கிடக்கு
முவளகங் கண்ணுற் றுவர்க்கட லிஃதெனப்
பருகுவா னமைந்த கருவிமா மழையுஞ்
செங்கண்மால் களிறுஞ் சென்றன படிய
வெங்கண்வா ளுழவர் வேற்றுமை தெரியார்
வல்விலங் கிடுதலின் வல்விலங் கிதுவெனச்
செல்விலங் கிடவெதிர் சென்றனர் பற்றக்
காக பந்தரிற் கைந்நிமிர்த் தெழுந்து
பாகொடு முலாவிப் படர்தரு தோற்ற
நெடுவேல் வழுதி நிகளம் பூட்டிக்
கொடுபோ தந்த கொண்டலை நிகர்க்குஞ்

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR. MADRAS-600 090

சீர்கெழு கமலைத் திருநகர் புரக்குங்
கார்நிறத் தன்ன கறைமிடற் றண்ணன்
மூவரென் றெண்ணநின் முதற்றொழில் பூண்டு
மேவலிற் செய்துமென் றெண்ணு ராகி
யடங்கா வகந்தைக் கறிவெலாம் வழங்கி
யுடம்பு வேறு யுயிர்ப்பொறை சுமந்து
நாளு நாளு நேடினர் திரிந்துங்
காணு தொழிந்ததை நிற்க நாணு
தியாவரு மிறைஞ்ச விறுமாப் பெய்துபு
தேவரென் றிருக்குஞ் சிலர்பிறர் தவத்தினு
மிகப்பருந் தொண்டரொ டிகலிமற் றுன்னொடும்
பகைத்திறம் பூண்ட பதகனே யெனினு
நின்றிருப் பாத நேர்வரக் கண்டு
பொன்றின னேனும் புகழ்பெற் றிருத்தலி
னிமையா முக்கணெந் தாய்க்கு
நமனுர் செய்த நற்றவம் பெரிதே.

நாஞ்சில்-மதிலுறுப்பு, ஈண்டுமதிலைக்குறித்தது. உவளகம்-பள்ளம், ஈண்டு அகழியைக் குறித்தது. கண்ணுற்று - கண்டு. கருவி—(உலகிற்குக்) காரணம். களிறு-யானை. வாளுழவர்-வாள்வீர ரென்க. வேற்றுமை யானையிது மேகமிது வென்னும் வேறுபாடு. வல்விலங்கு இதுவென - இது யானையென்று கருதி. செல்விலங்கிட - மேகமானது விலகிப்போக. பற்ற - அம்மேகத்தைப் பிடிக்க. காகபந்தரில் - காகங்கள்பறந்துவிரிந்த பந்தலைப்போல. கை-வடமொழியில்வரு முபசர்க்கம்போலத் தமிழ்ப்பதத்தைச் சார்ந்துவருமோர் இடைச்சொல். பாகு-பாகன். படர்தரல் - செல்லுதல். வழுதி - உக்கிரகுமாரபாண்டியன். நிகளம்-விலங்கு. கொடுபோதந்த-கொண்டுவந்த. பாண்டியன் மேகத்தை விலங்குபூட்டிக் கொண்டுவந்த கதை திருவிளையாடற்புராணத்தி லறிக. மூவர் - திரிமூர்த்திகள். முதற்றொழில் - முதன்மையாகிய சிருட்டி திதித்தொழில்கள். ஏவலில் - நின் னுடைய ஏவலால். அகந்தை - அகங்காரம். உடம்பு வேறய் - அன்னமும் பன்றியுமாக வேறுபட்டு. நேடினர் - தேடினராகி, ஒழிந்ததை என்பதில் ஐ சாரியை. நிற்க—(யாவருமறிந்ததாய்) நிலைபெற்றிருக்க. எய்துபு - அடைந்து. சிலர் பிறர் - பிரமவிட்டுணுக்கள் அந்நியரேயாவர். தவத்தினும் என்ற வும்மை யால் வினயவொழுக்க மன்பு முதலியவற்றிலுமென்க. இகப்பரும்-பழித்தலில் லாத. தொண்டரென்றது மார்க்கண்டரை. பதகன் - பாதகன். பொன்றினன்-இறந்தான். திருவடியைத் தெரிசித்தலன்றி பரிசித்தலுமடைந்தமையால், "நம

ஞர்செய்தநற்றவம்பெரிதென்று" ரென்க. முகில்பாவியெழுதற்குக்காக பந்தரை யுவமானங்கூறிஞர்; இவ்வாறு கந்தபுராணம் மகா-ஆவதுகவியிற் காண்க.

## நேரிசை வெண்பா.

நற்கரும்பு முக்கட் கரும்பென்னு நங்கைமீர்
விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னுஞ்-சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்கரும்பா மாரூரர்
காமக் கரும்புங் கரும்பு.

நங்கைமீர்-மாதரே. சொற்கரும்பின் வாமக்கரும்பு மனைக்கரும்பா மாரூரர்-கரும்புபோன்ற சொல்லையுடைய இடப்பாகத்திருக்குங் கரும்பாகிய உமாதேவியை மனைக்குரிய கரும்பாகக்கொள்ளும் ஆரூரருடைய. காமக்கரும்புங் கரும்பு-காமவின்பத்திற்காக அரும்புகின்ற கரும்பாகியதலைவி. நற்கரும்பு முக்கட்கரும்பென்னும்-முக்கண்ணையுடைய சிவபிராஞகிய கரும்பே நல்லகரும்பென்றுரைப்பாள். விற்கரும்பன் கைக்கரும்போ வேம்பென்னும்-மன்மதன்கையிலுள்ள கரும்புவில் வேம்பாகுமென் றுரைப்பாள். யாதுசெய்வோ மென்றது எஞ்சிநின்றது. ஓ-அசை. (33)

## கட்டளைக்கலித்துறை.

கரும்புற்ற செந்நெல் வயற்கம லேசர்கண் டார்க்குமச்சந்
தரும்புற் றினிற்குடி கொண்டிருந் தாரது தானுமன்றி
விரும்புற்ற மாசுணப் பூணணிந் தார்வெவ் விடமுமுண்டார்
சுரும்புற்ற கார்வரைத் தோகைபங் கான துணிவுகொண்டே

புற்று-கோயிலிலிருக்கும் புற்றென் றறிக; இதனைற்புற்றிடங்கொண்டார் என்று சுவாமிக்குப்பெயருண்டு. மாசுணம்-பாம்பு. சுரும்பு-வண்டு. வரைத்தோகை-மலையிலுள்ள மயிலாகிய உமாதேவியென்க. (34)

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டலை யலைத்தபல தண்டலை யுடுத்தழகு
கொண்டகம லைப்பதி யுளார்க்
கண்டபி னெனக்கிதழி தந்தன ரெனப்பசலை
கண்டுயிர் தளிர்ந்த மடமா
ளண்டமு தொத்தவமு தந்தனையி ருட்கடுவி
தன்பருண் மிச்சில் சொலலெனு
வுண்டிடு முளத்திலவ ருண்குவரென் மிச்சிலென
வுண்டதை மறுத்து மிழுமே.

பசலைகண்டு—காமத்தாலுண்டாகிய பசப்பைக்கண்டு. இதழிதந்தனரென உயிர்தளிர்த்தமடவாள்—கொன்றைமாலைதந்தாரென்றுயிர் தழைக்கப்பெற்ற தலைவி. அமுதந்தனை—பாலை. இருட்கடுவிது—கரியவிடமாகிய இது. அன்பர் அருள் மிச்சில்கொல் என்று உண்டிடும்—கமலைப்பதியுளாராகிய அன்பர்கொடுத்த சேடமோவென்றுண்பாள். என்மிச்சில்—என்னுடைய சேடத்தை. அவருண்குவரென—உள்ளிருக்குமவ்வன்பர் உண்பாரென்று கருதி. உண்டதை மறுத்து உமிழும்—தானுண்டதைநீக்கிக் கக்கிவிடுவாள். யாதுசெய்வோமென்பது எஞ்சி நின்றது. கொன்றைப்பூநிறம்போற்பசலையிருத்தலால் இதழிதந்தாரென்றும், அமுதந்தனக்குவிடமாயிருத்தலால் இருட்கடுவிதுவென்றுங்கூறினாளென்க. (35)

## நேரிசையாசிரியப்பா.

உமிழ்தேன் பிலிற்று மொள்ளிணர்க் கூந்த
லமிழ்தூறு மழலை யம்மென் றீஞ்சொற்
சில்லரித் தடங்கண் மெல்லிய லொருத்தி
வரிசிலைத் தடக்கைக் குரிசின்மற் றொருவன்
பொன்னெடு மார்பிற் பொலன்கல னிமைப்பத்
தன்னுருத் தோற்றந் தரிக்கலள் வெகுண்டு
மாலா யினனென வணங்கினை யிரத்தலிற்
றோலா மொழியை வாழிய பெரிதெனப்
புலந்தன ளெழுதலுங் கலங்கினன் வெரீஇக்
கண்மலர் சிவப்ப மெய்பசப் பெய்தலிற்
றானு மாலாந் தன்மையள் கொல்லெனத்
தேறினன் றாழ்ந்து சிலம்படி திருத்திப்
பஞ்சியிற் பொலிந்த குஞ்சிய னிரப்பக்
கூடின னல்லன் கூடா னல்லன்
னகைமிகு சீற்றமுங் காதலு மலைப்ப
வெள்ளப் புணர்ச்சியின் வேட்கை யுள்ளடக்கி
யுள்ளப் புணர்ச்சிய னொடின னிற்பது
தாதவிழ் தெரியற் சாக்கியர் பெருமான்
காதலுட் கிடப்பக் கல்லெறிந் தற்றே
யித்திற மகளி ரிளைஞரோ டாடு
நித்தில மாட நீண்மறு குடுத்தலைம்
மாமுகி றவழு மணிமதிற் கமலைப்

பெம்மா னருமைப் பெருமா னாயினு
மூனுண் வாழ்க்கைக் கானவர் குரிசில்
செஞ்சிலை சுமந்த கருமுகி லேய்ப்ப
வுண்டுமிழ் தீநீ ருவந்தன ராடியும்
விருப்படிக் கொண்ட மிச்சிலூன் மிசைந்துஞ்
செருப்படிக் கடிகள் செம்மாந் திருந்துந்
தொல்புகழ் விசயன் வில்லடி பொறுத்து
மருந்தமிழ் வழுதி பிரம்படிக் குவந்து
நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
றள்ளாக் காத றணித்தற் கம்ம
பாவை வாய்தலிற் பதமலர் சேப்ப
வொருகா லல்ல விருகா னடந்து
மெளியரி னெளிய ராயின
ரளியர் போலு மன்பர்க டமக்கே.

4890

பிலிற்றல்—துளித்தல். ஒள் இணர்-ஒளியையுடைய பூங்கொத்து. சில் அரி—சிலவாகிய செவ்வரி கருவரி. தன்உரு—தலைவி தனதுவடிவம். மால் ஆயினன்என வணங்கினை இரத்தலில்—உன்மீது மயக்கமாயினேனென்று பணிந்தாயாகி யிரத்தலால். தோலாமொழியை-தோல்வியில்லாத வார்த்தையையுடையாய், உண்மைவசனமுடையாய் என்பது கருத்து. அவன்மார்பிற் பொலன்கலனிற் றன்னுருத் தோற்றக்கண்டாளாதலால் மாலாயின னென்றது உண்மை வசனமேயென்பாள் தோலாமொழியையெனக் குறித்துரைத்தாளென்க. புலந்தனள்—ஊடினள். வெரீஇ—அஞ்சி. தானும்—தலைவியும். கோபத்தாற் கண்மலர் சிவப்பும் காமத்தால் மெய்பசப்பெய்தவு மிருத்தலாற், செந்தாமரைக்கண்ணையும் பச்சைமேனியுமுடைய மாலாகுந் தன்மையாளோவெனத் தேறினனென்க. சிலம்படி திருத்தி—தலைவியினடியிலுள்ள சிலம்பைப்பிறழ்ச்சியின்றியொழுங்குபடச் செய்து வணங்கும்போது பாதத்தூட்டிய செம்பஞ்சின் குழம்பு சிகையிற் பொருந்தி விளங்கியிருத்தலாற் பஞ்சியிற்பொலிந்த குஞ்சியனென்றார். அலைப்பவருத்த வெள்ளம்—மிகுதி. உள்ளப்புணர்ச்சியள்—மெய்யுறுபுணர்ச்சியின்றி மனத்தாற்புணரும் புணர்ச்சியையுடையவளாகி. சாக்கியர்—சாக்கியநாயனர். பெருமான்காதல் உள்கிடப்ப—சிவலிங்கப்பெருமானைச்சேரும் அன்பானது அகத்தேயிருக்க. கல் எறிந்தற்று—புறத்தேவெறுப்புத்தோன்றக் கல்லினை யெறிந்த அத்தன்மைத்து. மை மா முகில்—கரியபெரிய மேகம். கானவர்குரிசில்- வேடர்தலைவராகிய கண்ணப்பநாயனர். தீநீர்—தித்திப்புடையநீர். மிசைந்தும்— உண்டும். செம்மாந்து — களிப்புற்று. அம்ம — அசை. கமலைப்பெம்மானுகிய

அடிகள் அருமைப்பெருமாளாயினும் எளியரினெளியராயினர் ஆதலால் அன்பர் கடமக்களியரென முடித்துரைக்க. அளியர்-எளியர், அன்பர் என்றுமாம். அடிகள்—முதல்வர். பெம்மானடிகளென ஒருமைபன்மை விரவிவந்தது, பெரிய புராணந் தடுத்தாட்கொண்டபுராணத்தில், கஎஅ-ஆவ துகவியில், திருவாரூர்வாழ் பெருமானடிகள் எனக்கூறியவாறு காண்க. (36)

## நேரிசைவெண்பா.

தம்மேனி வெண்பொடியாற் றண்ணளியா லாரூர்
செம்மேனி கங்கைத் திருநதியே—யம்மேனி
மானே யமுனையந்த வாணிநதி யுங்குமரன்
றானே குடைவேந் தனித்து.

வெண்பொடி—விபூதி. தண்ணளி—கிருபை, கங்கையைக்குறிக்கும்போது குளிர்ச்சியென்க. வெண்பொடி நிறத்தாலும் தண்ணளியாலும் ஆரூரர்செம் மேனி கங்கைத்திருநதியாமென்க. அம்மேனிமான்—அவ்வாரூரர் செம்மேனியுட னிருக்குமானாகிய உமாதேவி. யமுனைக்குநிறம் கறுப்பாதலால் உமாதேவி யமுனையாமென்க. வாணிநதிக்கு நிறம் சிவப்பாதலால் இருவருக்குமத்தியி லிருக்கும் குமரக்கடவுள் வாணிநதியாமென்க. குடைதல்—மூழ்குதல். மூவகையு நதியென்றதற்கேற்ப மூழ்குவேமென்றாரெனினும், அம்மூவருடைய கருணை வெள்ளத்தமிழ்ந்து வேமென்பது கருத்தென்க. ஏ தான் அசைகள் வாணி நதிக்குச் சோணைநதியென்றும் பெயருண்டு. (37)

## கட்டளைக்கலித்துறை.

தன்னொக்குஞ் செல்வக் கமலைப் பிரான்செஞ் சடாடவிமற்
றென்னொக்கு மென்னி லெரியொக்குங் கொன்றை யெரியிலிட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்குங் கங்கையப் பொன்செய்விக்கு
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்ல னொக்குமவ் வெண்பிறையே.

செஞ்சடாடவி—சடைக்காடு. மற்று—அசை. பொன்செய்விக்கு மின்—பொன்னை ஆபரணமாகச்செய்விக்கும் பெண். நரையால் வெண்ணிறமும் உடல்வளைவுமுண்மையாற் கிழக்கொல்லனை வெண்பிறைக்குவமானமாகக் கூறினர். (38)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொண்டரிடை கொழித்தெறிக்குஞ் செஞ்சடைமோலியர்வீதி
விடங்கனார்க்
கண்டனைதல்பொற் புயவரைசேர் தனவரைக ளிரண்டவற்றுட்
கனகபோரு
வண்ணமல்புய வரைக்குடைந்து குழைந்துதலை வணங்கிடுமெம்
மன்னிைாய
வன்னமுலைத் தடவரையவ் வரைகுழையப் பொருவதல்லால்
வணங்கிடாதே.

மோலி-முடி. தனவரை-பொன்மலையாகிய மேருவென்றும், முலையாகிய மலையென்றுமிருபொருள்கொள்க. அவ்வரை [illegible]ன்றது அண்ணல்புய வரையை. வணங்கிடாது-வணங்கமாட்டாது, [illegible]ெற் புயவரைவணங்கு மென்பதுட் கருத்தாயிற்று. (39)

நேரிசையாசிரியப்[illegible]

வண்டுகூட் டுண்ணா நறுங்கனி [illegible]
தண்டே னுறைக்குந் தடமலர்ப் [illegible]றும்பரின்
விழுக்குலை தெறிப்ப விட்புலத் தவர்க்குப்
பழக்காய் தூக்கும் பச்சிளங் கமுகிற்
செடிபடு முல்லைக் கொடிபடர்ந் தேறித்
தலைவிரித் தென்னக் கிளைதொறும் பிணைத்து
மறிந்துகீழ் விழுந்த நறுந்துணர்க் கொடிகு
றைற்றிசைப் புறத்து நான்றன படிந்து
நாற்றினங் கதலித் தண்டினிற் படரப்
பைங்குலைக் கமுகிற் படர்சிறை விரித்தொரு
கண்செய் கூந்தற் கவரிமா னடிப்ப
நெடுந்தாண் மந்திகள் குடங்கையிற் றூக்கி
முட்புறக் கனிக டாக்கக் கொட்புறும்
வானர மொன்று வருக்கைத் தீங்கனி
தானெடுத் தேந்துபு தலைமேற்கொண்டு
மந்திக டொடர மருண்டுமற் றந்தப்
பைந்துணர்க் கொடியிற் படர்தரு தோற்றம்
வடஞ்சூழ்ந்து கிடந்த நெடும்பெருங் கம்பத்
தணங்கனொருத்தி யாடின ளிற்பப்

பெரும்பணை தாங்கி மருங்கினர் கொட்டக்
குடந்தலைக் கொண்டொரு கூன்கழைக் கூத்தன்
வடந்தனி னடக்கும் வண்மை தேய்க்கும்
பூம்பணை மருதத் தீம்புனற் காலைத்
திருநகர் புரக்குங் கருணையங் கடவு
ளன்பெறு மந்தரத் தாசைநாண் பிணித்து
வண்டுழாய் முகுந்தன் மதித்தனன் வருந்த
வருட்பெருங் கடலிற் றோன்றி விருப்பொடு
மிந்திரன் வேண்ட வும்பர்நாட் டெய்தி
யந்தமி றிருவொடு மரசவற் குதவி
யொருகோ லோச்சி யிருநிலம் புரப்பான்
றிசைதிசை யுருட்டுந் திகிரியன் சென்ற
முசுகுந் தனுக்கு முன்னின் றாங்குப்
பொன்னுல கிழிந்து புடவியிற் றோன்றி
மன்னுயிர்க் கின்னருள் வழங்குதும் யாமென
மேவர வழங்குமான் மன்ற
யாவிரு நாற்கா ளிறைஞ்சுமின் னீரே.

கூட்டுண்ண-கொள்ளைகொண் டுண்ண. பிலிற்றி-சிந்தி. உறைக்கும்-துளிக்கும். பொதும்பர்-சோலை. தெறிப்ப-சிந்தும்படியாக. செடிபடு-செறிவாக வுண்டாகின்ற. செடி-செறிவு. பணைத்து-மிகுத்து. மறிந்து-மடங்கி. கொடிகள்-அம்முல்லைக்கொடிகள். நான்றன-தொங்கினவாகி. தாறு-குலை. கூந்தல் என்றது மயிற்றோகையை. முட்புறக்கனி-முள்ளைப்புறத்தேயுடைய பலாக் கனிகளை. தாக்க-அடிக்க. கொட்புறும்-சுழற்சியுறும். வந்துபு-வந்தி. படர்தல்-செல்லல். வடம்-கயிறு. பணை-பறை. வய்க்கும்-ஒக்கும். பூம்பணை-அழகிய வயல். மதித்தல், கடைதல், கருதுதல். முசுகுந்தன்-ஓர்சக்கரவர்த்தி. முன்னின்றாங்கு-முன்னின்று காட்சிகொடுத்தருளியதுபோல. புடவி-பூமி. மேவர-விரும்ப. மன்ற-நிச்சயமாக. (40)

இக்கவியினிறுதியில், திருமால்பூசித்ததியாகராசரை இந்திரனுக்குக் கொடுக்க இந்திரன் முசுகுந்தனுக்குக்கொடுக்க முசுகுந்தன் றிருவாரூர்ப்பூங்கோயிலிலெழுந்தருளப்பண்ணி விழாநடத்தினன் எனக் கந்தபுராணங்கந்தவிரதப் படலத்திறுதியிற் கூறியதைச் சுருக்கிக்கூறிய துணர்ந்துகொள்க.

திருவாரூர் நான்மணிமாலை மூலமும்
குறிப்புரையு முற்றுப்பெற்றன.

பக்கம்
தொகை

# விஷயசூசிகை.


௧. சிவபிரான்றிரிபுரசங்காரகாலத்துப் பூமியை யிரதமாகவூர்ந்தது.

,, தியாகராசர் சுயம்புமூர்த்தியென்பது.

௨. சிவபிரான் மேருமலையை வில்லாகவளைத்தது.

௩. நரசிங்கமூர்த்தி இரணியனைக்கொன்றது.

௭. திருமாலிதயகமலத்துச் சிவபிரா னுபாசிக்க வுள்ளாரென்பது.

,, பூமிதேவியினிதயகமலமாகத் திருவாரூருள்ளதென்பது.

௮. உமாதேவி முப்பத்திரண்டறம் வளர்த்தாளென்பது.

௧0. சிவபிரான் றிருமாலை அம்பாகக்கொண்டது.

௧௫. சிவபிரான் வையைநதிக்கரையடைக்க மண்சுமந்தது.

௧௬. அரிபிரமர்கள் சிவபிரானடிமுடிகாணாராயின ரென்பது.

௧௭. தியாகராசர் இருந்துநடனஞ்செய்வா ரென்பது.

௧௯. இலக்குமி தியாகராசரை வழிப்பட்டாளென்பது.

௨0. உயிர்கட்கெழுவகைத்தோற்றமுண் டென்பது.

௨௮. சிவபிரான் மதனையெரித்தது.

,, சிவபிரான் மார்க்கண்டமுனிவரைச் சிரஞ்சீவியாயிருக்க வருளியது.

,, சிவபிரான் இயமனையுதைத்தது.

,, சிவபிரானைத் திருமால்விடையாகத் தாங்கினது.

,, திருவாரூர்க்கோயிலிற் றேவாசிரயமண்டப முண்டென்பது.

,, திருவாரூரிற் பிறந்தவர் சாரூபபதவியடைவா ரென்பது.

௩௨. பாண்டியன் மேகத்தைத் தளைபூட்டினனென்பது.

௩௫. சிவபிரானைச் சாக்கியநாயனார் கல்லாலெறிந்தது.

,, சிவபிரான் கண்ணப்பநாயனார் வாய்நீராடி மிச்சி லுண்டு செருப்படிகொண்டா ரென்பது.

,, சிவபிரான் விசயன்வில்லடிபட்டா ரென்பது.

௪0. திருமால் பூசிக்கப்பெற்றிருந்த தியாகராசர் இந்திரன் வேண்டத் தேவலோகத்திற்சென்று, அவன்பூசிக்கப்பெற் றங்கிருந்து, முசுகுந்தச்சக்கரவர்த்திவேண்டத்திருவாரூர்ப் பூங்கோயிலிலெழுந்தருளியிருக்கின்றாரென்பது.